செய்தி வெளியீடு எண். 117 நாள். 24.02.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய்த்தடுப்பூசிப் பணி தொடர்பாக துறைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர், திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில கால்நடைகளுக்கான கோமாரி நோய்த்தடுப்பூசிப் பணி தொடர்பாக துறைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர், திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.02.2017) நடைபெற்றது.

கோமாரி நோய்த்தடுப்பூசி முகாம் மார்ச், 2017-ம் மாதம் 1-ம் தேதி முதல் தொடர்ந்து 21 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. அனைத்த ஊராட்சிகளிலும் 27.02.2017 அன்று சிறப்பு கிராம சபாக்கள் நடத்தப்பட்டு, தடுப்பூசி முகாம் நடைபெறுவது குறித்து, பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு மாட்டினங்களுக்கு 100 சதவீதத் தடுப்பூசி போடுவது உறுதி செய்யப்படும். கால்நடை வளர்ப்போர்கள் தங்களது கால்நடைகளைத் தவறாமல் தடுப்பூசி போடும் இடத்திற்குக் கொண்டு வந்து தடுப்பூசி போட்டு கோமாரி நோய்த் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஜாகீர் உசேன், திட்ட அலுவலர் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்) திருமதி.கிருஷ்ணம்மாள், கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர், டாக்டர்.தா.இராமமூர்த்தி, கூட்டுறவு துணைப்பதிவாளர் (பால்வளம்) திருமதி.மு.மகேஸ்வரி, ஆவின் மேலாளர் டாக்டர்.அனிஷ், புதுவாழ்வுத்திட்ட அலுவலர் திரு.குணசேகரன ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~